# கோவிட் -19 தொற்று பரவலின் எதிரொலியாக ஜூன் 15 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் பேருந்து சேவையில் மாற்றங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 9, 2020) – நகரத்தை மீண்டும் திறப்பது மற்றும் மீட்சிக்கான திட்டத்தின் ஒரு அங்கமாக, ஜூன் 15 திங்கட்கிழமை தொடங்கி, அடுத்த அறிவிப்பு வரும் வரை பேருந்து சேவைகள் பின்வருமாறு மாற்றப்படும்.

ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்து வழித்தடங்கள் ஜூன் 15 ஆம் தேதி முதல் இயங்கும்; இது நமது நகரின் மக்களை, நமது பேருந்து போக்குவரத்துக் கட்டமைப்பானது, திறம்பட இடம் விட்டு இடம் கொண்டு செல்ல வைப்பதை உறுதி செய்வதற்கேயாகும். கைவசம் இருக்கும் பேருந்துகளைக் கொண்டு இந்த சேவைகளைச் செய்ய மிகச்சிறந்த முயற்சிகள் எடுக்கப்படும்.

- 501 ஸூம் க்வீன்
- 502 ஸூம் மெயின்
- 511/511A ஸூம் ஸ்டீல்ஸ்
- 1/1A க்வீன்
- 2 மெயின்
- 3 மெக்லாலின்
- 4/4A சிங்க்வாகவ்ஸி
- 5/5A பொவெய்ர்ட்
- 6 ஜேம்ஸ் போட்டெர்
- 7/7A கென்னடி
- 8 சென்ட்டர்
- 9 வோட்டென்
- 10 சவுத் இண்டஸ்ட்ரியல்
- 11/11A ஸ்டீல்ஸ்
- 14/14A டோர்ப்ரம்
- 15 ப்ரமீலியா
- 18 டிக்ஸீ
- 20/20A ஈஸ்ட் இண்டஸ்ட்ரியல்
- 23 ஸாண்டல்வுட்
- 26 மவுண்ட் ப்ளெஸண்ட்
- 29 வில்லியம்ஸ் பார்க்வே

- 30 ஏர்போர்ட் ரோட்
- 31 மெக்வீன்
- 35 க்ளார்க்வே
- 50 கோர் ரோட்
- 51 ஹியர்ஃபோர்ட்
- 52 மெக்மர்ச்சி
- 53 ரே லாஸன்
- 56 கிங் ங்னோல்
- 57 சாரோலெய்ஸ்
- 60 மிஸ்ஸிஸ்ஸாக
- 115 பியர்ஸன் ஏர்போர்ட் எக்ஸ்ப்ரஸ்

கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக மூத்த குடிமக்கள் ID மற்றும் மிக மூத்தவர்களுக்கான அட்டைகள் வழங்கப்படுவதில்லை. வாடிக்கையாளர்கள் அடுத்த அறிவிப்பு வரும் வரை தங்கள் காலாவதியான அட்டைகளையே பயன்படுத்தலாம்.

வாடிக்கையாளர் சேவை கவுன்டர்கள் மூடப்பட்டுள்ளன என்பதை நினைவுபடுத்துகிறோம். ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனையங்கள் காலை 6 முதல் இரவு 9 மணி வரை பணியாற்றும்.

தற்போது புழக்கத்தில் உள்ள சேவைகள் மற்றும் அவற்றின் கால அட்டவணைகளுக்கு வருகை தரவும்: www.bramptontransit.com

**கோவிட்-19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து மேற்பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றது. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

**BRAMPTON** Service and Information Update

பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் பயணிக்கையில் மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை அணிய வேண்டும் என்ற  பீல் ப்பளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இந்த இக்கட்டான சமயத்தில், பயணிகள் பேருந்துகளில் மற்றும் பேருந்து முனையங்களில் இருக்கும்போது மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை அணிய  வலியுறுத்தி பரிந்துரைக்கப்படுகிறார்கள். ஜூலை 2 ஆம் தேதி பேருந்துக் கட்டணம் வசூலிப்பது மீண்டும் துவங்க இருக்கும்போது ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து பயணிகளும் அவற்றை இயக்குபவர்களும் மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை அணிவது கட்டாயமாக இருக்கும். மேலும் தகவல்களுக்கு  இங்கு க்ளிக் செய்யவும்.

பேருந்து முனையங்களில் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் பயணிகள் முகக் கவசங்களை அணிந்திருந்தாலும் கூட உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நகர நிர்வாகம் வலியுறுத்துகிறது.  பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற  கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் மற்றும் இருமுதல் , தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோவிட்-19  தொற்றுப் பரவலின்போது, ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன்  நெருக்கமாக செயல்படுகிறது.  வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19  ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும்  அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca